# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP 2952/D/2024**

| | | |
|---|---|---|
| திரு இரா.முருகேசன் | .. | மனுதாரர் |

/எதிர்/

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>செயற்பொறியாளர்,<br>பட்டினப்பாக்கம் கோட்டம்,<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,<br>எர்ணாவூர், சென்னை - 600 057. | .. | பொது அதிகார அமைப்பு |

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 26.04.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவின் நாள் | 18.06.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு இரா.முருகேசன் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி C.காளியம்மாள், கண்காணிப்பாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், எர்ணாவூர், சென்னை - 600 057 அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 26.04.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பட்டினப்பாக்கம் MIG குடியிருப்போர் நல சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் 13.04.2024 ல் தங்கள் செயற்பொறியாளருக்கு அனுப்பப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்

தொடர்பான 2 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பட்டினப்பாக்கம் கோட்டம், சென்னை - 600 035 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 18(1)ன் கீழான 18.06.2024 தேதியிட்ட புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்கள் அனைத்தும் பொதுத் தகவல் அலுவலகத்தில் இருந்தும் பொதுத் தகவல் அலுவலர் இதுநாள் வரையில், தனக்கு முழுமையான தகவல்களை வழங்காத பொது அதிகார அமைப்புக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)இன்படி தண்டமும், பிரிவு 20(2)இன் படி துறை வாரியான நடவடிக்கை எடுக்க அரசிற்கு பரிந்துறைக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும் மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பிரிவு 19(8)(b)-இன் படி இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய சென்னை நந்தனத்தில் செயல்பட்டு வந்த பட்டினப்பாக்கம் கோட்டம் தற்போது 27.03.2025 முதல் சென்னை மாவட்டம், எர்ணாவூர் கிராமத்தில் 6877 நலிந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடி குடியிருப்புகள் (தூண் தளம் + 13 தளங்கள்) கட்டும் திட்டத்தில் உள்ள பிளாக் எண்.21 ல் முதல் தளத்தில் செயல்பட்டு வருவதாகவும், தற்போது எர்ணாவூர் திட்ட பகுதியில் செயல்பட்டு வரும் பட்டினப்பாக்கம் கோட்டத்தை சென்னை நந்தனம் கோட்டத்துடன் இணைக்கும் பொருட்டு அலுவலகத்தில் உள்ள கோப்புகளின் பட்டியல் தயார் செய்யும் போது பட்டினப்பாக்கம் கோட்டத்தில் உள்ள அலுவலக சம்பந்தமான தற்போது நடவடிக்கையில் இல்லாத மற்றும் நடப்பு கோப்புகள் காணவில்லை என்றும், அலுவலக சம்மந்தப்பட்ட கோப்புகள் காணவில்லை என்பதால் பட்டினப்பாக்கம் கோட்ட அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி அவர்களது இருக்கைகளில் தேடிப் பார்த்து விவரம் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், பணியாளர்கள் அனைவரும் தேடிபார்த்த பின் கோப்புகள் தங்கள் இருக்கையில் இல்லை என அறிக்கை சமர்ப்பித்ததாகவும், ஒதுக்கீடு மற்றும் திட்டப்பிரிவு சம்மந்தமான அலுவலக கோப்புகளை விசாரணை செய்து மீட்டு தருமாறு காவல் ஆய்வாளர், எர்ணாவூர் பிரிவு, எண்ணூர், சென்னை - 600 057 அவர்களுக்கு புகார் மனு அளித்திருப்பதாகத் தெரிவித்து ஆவணங்களை விசாரணையின் போது சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த, திரு ரூபேஷ், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பட்டினப்பாக்கம் கோட்டம், எர்ணாவூர், சென்னை -057 அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 07.08.2026 அன்று நேரில் ஆஜராகி***

சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது

- மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத ஒரு பொது அதிகார அமைப்பின் கோட்ட கணக்காயர் பொறுப்பில் இருக்கும் உயர் அதிகாரி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன் படி மனுதாரரின் மனு பெறப்பட்டு 2 ஆண்டு காலம் ஆகியும் மனுதாரருக்கு இதுநாள் வரையில் முழுமையான தகவல்களை வழங்காமல் இருந்த 26.04.2024 நாளன்று பொதுத் தகவல் அலுவலராக இருந்த தகவல் அலுவலர் / தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பட்டினப்பாக்கம் கோட்டம், எர்ணாவூர், சென்னை -057 அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மேல் கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்திற்கு வழிவகுக்கும் இந்த சட்டத்தினை மதிக்காமல் செயல்பட்ட பொது அதிகார அமைப்பினை இவ்வாணையம் வன்மையாக கண்டிக்கிறது.

- மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை வழங்கும் நோக்கில், தலைமை வருவாய் அதிகாரி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பட்டினப்பாக்கம் கோட்டம், எர்ணாவூர், சென்னை - 600 057 அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)-இன் கீழ் 1. அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு, மனுதாரருக்கு உரிய தகவல்களை ஒவ்வொரு பக்கத்திலும் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் சென்னை மாவட்டம், எர்ணாவூர் கிராமத்தில் 6877 நலிந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடி குடியிருப்புகள் (தூண் தளம் + 13 தளங்கள்) கட்டும் திட்டத்தில் உள்ள ஒதுக்கீடு மற்றும் திட்டப்பிரிவு அலுவலக சம்மந்தப்பட்ட கோப்பு குறித்த விவரம் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு 1. தற்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.

ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.CP 2952/D/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
பட்டினப்பாக்கம் கோட்டம்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
எர்ணாவூர், சென்னை - 600 057.

**<u>உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு:</u>**
தலைமை வருவாய் அதிகாரி,
பட்டினப்பாக்கம் கோட்டம்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
எர்ணாவூர், சென்னை - 600 057.

**<u>மனுதாரர்</u>**
திரு இரா.முருகேசன்,
த/பெ.திரு ராமுத்தேவர்,
க.எண்.D/5, MIG Block,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
பட்டினப்பாக்கம்,
சென்னை - 600 028.

***Copy to: File***
***VP / PA***